செய்தி வெளியீடு எண். 53 நாள்.24.01.2017

## திருவள்ளூர் மாவட்டத்தின் ஆதார் அட்டை பெறாதவர்கள் மற்றும் தொலைத்தவர்கள் ஆதார் எண் தெரிந்துகொள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

----------

ஆதார் அட்டைக்கு பதிவு செய்து ஆதார் எண் மற்றும் ஆதார் அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் தங்களது ஆதார் எண்ணை தெரிந்து கொள்ள ஏதுவாக ஆதார் உதவிமையங்கள் திருவள்ளுர் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாடட்சியர் அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் 28.12.2016 முதல் 28.2.2017 வரை செயல்படும்.

இந்த ஆதார் உதவி மையங்களில் ஆதார் எண்ணிற்கு ஏற்கனவே பதிவுகளை செய்து விட்டு ஆதார் எண/ஆதார் அட்டை கிடைக்கப்பெறாத பொதுமக்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் நேரில் சென்று தங்களது பெயர், பிறந்த தேதி, அஞ்சல் குறியீடு எண், கை விரல் ரேகை மற்றும் கருவிழிகளைப் பதிவு செய்து, சில விநாடிகளில் தங்களின் ஆதார் எண்ணை அறிந்து கொள்ளலாம்.

மேற்கூறிய வழிமுறையில் கிடைத்த ஆதார் எண்ணை ஆதார் உதவி மையங்களின் அருகாமையிலேயே இயங்கும் அரசு இ-சேவை மையங்களில் காண்பித்து விரல்ரேகை / கருவிழியினைப் பதிவு செய்து ரூ.30/- மட்டும் கட்டணம் செலுத்தி கைக்கு அடக்கமான பிளாஸ்டிக் ஆதார் அட்டையாகவோ அல்லது ரூ.10/- மட்டும் செலுத்தி காகிதத்தில் அச்சிட்டோ பெற்றுக் கொள்ளலாம்.

எனவே ஆதார் எண்ணிற்கு ஒரு முறை பதிவு செய்தவா;கள் மீண்டும் மீண்டும் நிரந்தர ஆதார் பதிவு மையத்திற்கு செல்லத் தேவையில்லை என்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆதார் உதவி மையங்களை அணுகலாம் என திருவள்ளுர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**